# சர்வவியாபி

SARVA VIABI

MISSION PRESS 1840

17-02-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் மாசி 5 | வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 7 | வருடம்-113 | பக்கம்-12

e-mail:missionpress48@gmail.com

e-mail:missionpress48@yahoo.com

Ph: 0413/ 2334360

ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## இயேசுவை நம் வாழ்க்கைப் படகில் ஏற்றி பயணம் செய்வோம்

**- திருத்தந்தை**



இரவு முழுவதும் வலை வீசியும் மீன்கள் அகப்படாமல் சோர்வுடனும் ஏமாற்றத்திலும் இருந்த சீமோனை நோக்கி இயேசு வலை வீசக் கூறியதும், முதலில் மறுப்பை வெளியிட்டாலும், அவர் வார்த்தைகளை நம்பி வலை வீசியது, இயேசுவை பின்பற்றுவோர் ஒவ்வொருவருக்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டு என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

பிப்ரவரி 10 இஞ்ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான விசுவாசிகளுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, **சீமோனுக்கும் இயேசுவுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பில் நிகழ்த்தப்பட்ட புதுமை**யை மையப்படுத்தி தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

**விசுவாசத்தில் இறைவனுக்கு** பதிலுரைத்து, அவர் கட்டளைக்கு நம்பிக்கையுடன் கீழ்ப்படியும்போது, அதிக பலன்களை இறைவன் வழங்குவார் என்பது இந்த புதுமை நமக்கு கற்றுத் தரும் பாடம் என்று திருத்தந்தை தன் உரையில் கூறினார்.

**இறைப்பணியில் தாராள மனதுடன்** நாம் ஈடுபடும்போது, இறைவனும் நமக்கென வல்ல செயல்களை ஆற்றுகின்றார் என்பது, அனைவரும், குறிப்பாக திருஅவையில் பொறுப் புணர்வுகளை கொண்டிருப்போர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என மேலும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இறைவனை நம் வாழ்க்கைப் படகில் ஏற்றி பயணம் செய்யும்போது, பல்வேறு ஆச்சரியங்களை இறைவன் நமக்கு நிகழ்த்துவார் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித குலம் எனும் கடலுக்குள் புகுந்து, வாழ்வுக்கு ஒரு புது அர்த்தத்தைக் கொடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை எனவும் எடுத்துரைத்தார். இயேசு நிகழ்த்திய புதுமையைக் கண்டு திகைத்த சீமோன் பேதுரு, இயேசுவை நோக்கி, **ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடு** என கூறியதையும், அதற்கு இயேசு பதில்மொழியாக, **அஞ்சாதே; இது முதல் நீர் மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்,** என கூறியதையும் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை அவர்கள் இங்கு இயேசு நிகழ்த்திய புதுமையில் முக்கியத்துவம் பெறுவது, பெரிய அளவில் மீன்கள் கிடைக்கச் செய்தது அல்ல, மாறாக, பேதுருவையும் அவர் நண்பர் களையும் **ஏமாற்றத்திற்கு இரையாகாமல் காப்பாற்றியது** என்று கூறினார்.

**மனித வர்த்தகத்தால் துன்புறு வோருக்கு புனித பக்கீதாவின் பரிந்துரை:**

மனித வர்த்தகம் முடிவுக்கு வரவேண்டும் என, மனித வர்த்தகத் தால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித ஜோசப்பீன் பக்கீதா அவர்களின் பரிந்துரையை நாடுவோம் என இஞ்ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். மனிதர்கள் சுரண்டப்படுவது மற்றும் அடிமைகளாக நடத்தப்படுவது குறித்து கண்டனக் குரலை எழுப்புவதில் அனைவரும் செயல்பட வேண்டும் என்ற அழைப்பையும் விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த பொது அர்ப்பணத்தை செபத்தின் வழியாக பலப்படுத்த முடியும் என உரைத்தார். **அடிமைத்தனம், மனித வர்த்தகம் ஆகியவற்றால் காயமடைந்தோர், அச்சுறுத்தப்பட்டோர், மற்றும் தவறாக நடத்தப்பட்ட வர்களை இறைவனே விடுவிப்பாராக,** தங்கள் விசுவாசத் தின் துணையுடன் தங்கள் காயங்களிலிருந்து குணமடை வார்களாக எனவும் எடுத்துரைத்தார், திருத்தந்தை. மனித வர்த்தகத்திற்கு எதிராகப் போராடுவோருக்கு, குறிப்பாக, சில துறவு சபைகளுக்கு தன் நன்றியையும் வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக அரசுகளுக்கு விண்ணப்பம் ஒன்றையும் விடுத்தார்.

மனித வர்த்தகம் மற்றும் அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக புனித பக்கீதாவின் பரிந்துரையை வேண்டி விசுவாசிகளுடன் இணைந்து செபிக்கவும் செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

1869ம் ஆண்டு சூடானில் பிறந்தபக்கீதா அவர்கள், தன் 7ம் வயதிலேயே அடிமையாக விற்கப்பட்டு, பல்வேறு கொடுமைகளை அனுபவித்தார். இத்தாலிய அரசு அதிகாரி ஒருவரால் விடுதலை பெற்று, இத்தாலியின் சுனோசியன் துறவு சபையில் சேர்ந்து துறவி ஆனார். ●

**உண்மையான நட்பைவிட மதிப்பு வாய்ந்ததாக இவ்வுலகில் வேறு எதையும் கருதிட முடியாது. - தாமஸ் அக்வினாஸ்.**

ஆசிரியர் பேனா...

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வரலாற்று சிறப்புமிகு திருத்தூதுப் பயணம் வத்திக்கான் ➔ ஐக்கிய அரபு அமீரகம் (அபுதாபி) (3.2.2019 – 5.2.2019)

**ந**மது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்தே தமது எளிமை மற்றும் எளிய அணுகுமுறைகளினாலும், எளிய வாழ்வினாலும் பல ஆச்சர்யமிகு நிகழ்வுகள் இடம்பெறச் செய்கிறார்; இரக்கமும் பரிவும் உள்ளவராக வாழ்கிறார். கண்டுகொள்ளப்படாதன, சிறியன - ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தருகிறார். இதுவரை 75 கர்தினால்களை உருவாக்கிய இவர், சிறிய நாடுகளுக்கும் (பங்களாதேஷ், மியான்மர்) கர்தினால்களை ஏற்படுத்தியிருக் கிறார்; இதுவரை 27 திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்ட இவர், இலங்கை, மியான்மர், அசர்பைஜான், அல்பேனியா போன்ற சிறிய நாடுகளுக்கும், கத்தோலிக்கர் எண்ணிக்கை சிறியளவேயுள்ள நாடுகளுக்கும் சென்று வந்ததன் மூலம், கத்தோலிக்க திருச்சபை வரைபடத்தில் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

**புனித பிரான்சிஸ் அசிசியார் வழியில்:** அர்ஜன்டினா நாட்டு கர்தினால் மேதகு ஷோர்க் மரியோ பெர்கோலியோ அவர்கள் 13-3-2013-இல் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவர் "**பிரான்சிஸ்**" என்ற பெயரை தேர்ந்துகொண்டார். பலர், சேசு சபை சேர்ந்த இவர் பிரான்சிஸ் சவேரியாரை குறித்திருக்கலாம் என்று கருதிய வேளையில், மக்களோடு மக்களாக எளிய வாழ்வு (ஆயருக்குரிய ஆடம்பர இல்லம் தவிர்த்து தொகுப்பு வீட்டுப் பகுதியில் மூன்றாம் தளத்தில் குடியிருந்தார், பொதுமக்கள் பயன்படுத்தும் உந்து வண்டிகளில் பயணித்தார்) வாழ்ந்த அவர் "**புனித பிரான்சிஸ் அசிசியார்**" பெயர் தாங்கியிருப்பதை வெளிப்படுத்தினார்; அவரைப் போலவே எளிய வாழ்வு வாழ்கிறார்.

புனித பிரான்சிஸ் அசிசியார், ஐந்தாவது சிலுவைப் போர் கடுமையாக நிகழ்ந்த வேளையில், ஏராளமான கிறிஸ்தவர் களும் இஸ்லாமியரும் கொல்லப்பட்ட சூழலில், 1219 ஆம் ஆண்டு, எகிப்து சுல்தான் அல் மலிக் அல்-கமீல் அவர்களைச் சந்திக்க கடல்கடந்து எகிப்துக்குச் சென்று சுல்தானைச் சந்தித்து போர் வேண்டாம், போரை நிறுத்துங்கள். விண்ணகக் கடவுள் நம் தந்தை இதை விரும்புகிறார். போரினால் மக்கள் கொல்லப் படுவதை நிறுத்துங்கள் என்று கூறினார். கையில் எந்த ஒரு ஆயுதமும் இல்லாமல் ஒரு துறவி தன்னிடம் வந்து இவ்வாறு பேசியதை வியந்துபோன சுல்தான், அவரை தன்னோடு சில நாட்கள் தங்கச் செய்தார். அசிசியார் திரும்பும் போது, சுல்தான் அவருக்கு ஏராளமான பரிசுப் பொருள்களை வழங்கினார். எல்லாவற்றையும் வேண்டாம் என்று ஒதுக்கினார் அசிசியார். பகைமையை ஒழிக்கும், தீமையை அகற்றும் சக்தி வாய்ந்த சமாதானம் தேவை, பிரிவினை அகற்றப்பட வேண்டும் என்று கூறி அதன் அடையாளமாக தந்தத்தால் ஆன ஒரு சிறு வாளை மட்டும் எடுத்து வந்தார்; அது இன்னும் அசிசியில் பாதுகாப்பாக உள்ளது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அந்த நிகழ்வை, நமது திருத்தந்தை அரபிக் தீபகற்ப பகுதிக்கு - ஐக்கிய அரபு அமீரகத்திற்கு; அபுதாபி - திருப்பயணம் மேற்கொண்டது நமக்கு நினைவுபடுத்துகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 3-2-2019 ஞாயிறு இரவு 10.00 மணி அளவில் அபுதாபியில் தரையிறங்கியபோது அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது; அப்போது அவர் அபுதாபி தலைமை இமாம் அவர்களிடம் உங்கள் வரவேற்புக்கு நன்றி; சமாதானத்தைத் தேடும் உங்கள் சகோதரனாக, எளிய பயணியாக உங்கள் நாட்டுக்கு திருப்பயணமாக வந்துள்ளேன் என்று உரைத்தார். இது அரபு நாட்டினரை மட்டுமல்ல உலக மக்களையே சமாதான பாதைக்கு அழைக்கும் ஒரு தூண்டுதல் வாக்காகவே அமைந்துள்ளது. புனித பிரான்சிஸ் அசிசியார் பாதையிலேயே சமாதான தூதுவராக அவர் தனது 27 ஆவது திருத்தூது பயணத்தை நிகழ்த்தினார்.

**புனித திருத்தந்தை ஆறாவது பவுல் பாதையில்:** உரோம் நகருக்கு வெளியில் திருத்தூது பயணம் மேற்கொண்ட முதல் திருத்தந்தை புனித ஆறாவது பவுல் அவர்கள், நற்செய்தி மற்றும் சமாதான தூதுவராக தன்னை அடையாளப் படுத்தினார். 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திருத்தூதுப் பயணத்தை அவர் புனித நாட்டுக்கு மேற் கொண்டார். ஜோர்டன், இஸ்ரேல் ஆகிய முஸ்லிம்கள் அதிகம் கொண்ட நாடுகளுக்குச் சென்ற முதல் திருத்தந்தை அவரே. அதனைத் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் ஐந்து முக்கியமான தருணங் களில் இஸ்லாமிய நாடுகளுக்கு அவர் திருப்பயணம் மேற்கொண்டார். 1965 ஆம் ஆண்டு அவர் **ஐ.நா. சபையில்** உரையாற்றிய போது (ஐ.நா.சபையில் உரையாற்றிய முதல் திருத்தந்தை ஆறாவது பவுல்) "**போர் வேண்டாம்! ஒருபோதும் போர் வேண்டாம்.** நீங்கள் சகோதரர்களாக இருக்க வேண்டு மானால் போர்க் கருவிகளை தூக்கி எறியுங்கள். சமாதான பாதைக்கு திரும்புங்கள்" என்று அனைத்துலக சமூகத்துக்கு அறைகூவல் விடுத்தார். ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் 4.2.19-இல் அபுதாபியில் திருத்தந்தை பிரான்சிஸ் உரையாற்றிய போது "**போர் துன்பத்தைத் தவிர வேறு எதையும் தராது; போர்க் கருவிகள் சாவைத் தவிர வேறு எதனையும் கொண்டு வராது.** அதன் பயங்கர விளைவுகள் நம் கண்முன் நிற்கின்றன. குறிப் பாக ஏமன், சிரியா, இராக், லிபியா ஆகிய ஆகிய நாடுகளை நான் இங்கு நினைவு கூர்கிறேன்" என்று போர் நிறுத்தத்திற்கும், சமாதானத்திற்கும் அழைப்பு கொடுத்தார். திருத்தந்தை ஆறாவது பவுல் பாதையில் சமாதான தூதுராக தமது அபுதாபி பயணத்தை திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கொண்டார்.

**திருத்தந்தை பிரான்சிஸ் தமது எளிய வழியில்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 3-2-19 ஞாயிறு, நண்பகல் செப உரையில், ஐக்கிய அரபு ஆமீரக (UAE) த்திற்கு அன்று 1.00 மணி அளவில் தாம் தொடங்கும் திருத்தூது பயணத் திற்காக செபிக்க அன்று வத்திக்கான் வந்திருந்த திருப்பயணி களையும் அனைத்துலக மக்களையும் கேட்டுக்கொண்டார். இதனால் அனைத்துலக கிறிஸ்தவ மக்களும் தன்னோடு பயணிப்பதாகவே அவர் கருதினார். அவர் அபுதாபியில் தரை யிறங்கியபோது குண்டுகள் முழங்க இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. திருத்தந்தையும் அபுதாபி தலைமை இமாம் அகமது அல் தயீப் அவர்களும் ஆரத்தழுவி அன்பை வெளிப்படுத்தியதை ஊடகங்கள் உலகெங்கும் கொண்டு சென்று "சமாதானத்திற்கான தாகத்தை ஊட்டும் ஒரே கடவுளை வழிபடும் இரு மதத் தலைவர்கள்" என்று அறிக்கை யிட்டன. திருத்தந்தை தமது (KIA Soul) - கியா சோல் என்ற தனது சிறிய காரிலேயே பயணித்தார். "சகிப்புத்தன்மை ஆண்டாக" ஐக்கிய அரபு அமீரகம் இவ்வாண்டை சிறப்பிக்கும் இத்தருணத்தில் திருத்தந்தையின் திருப்பயணம் வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. பல நாட்டு மதத்தலைவர்கள் சந்திக்கும் "**மனித உடன் பிறந்த நிலை**" என்னும் பன்னாட்டு கருத்தரங்கில் திருத்தந்தையும் பங்கேற்று உரையாற்றினார். (முழு சொற்பொழிவும் சென்ற வார இதழில் காணலாம்). தலைமை இமாம் ஷேக் அகமது அல் தயீப் அவர் களுடன் அமைதிக்கான ஆவணத்தில் திருத்தந்தை கையெழுத்திட்டார். மத நம்பிக்கை, அமைதி, வன்முறை தவிர்த்தல், மதம் மற்றும் கலாச்சாரத்தை மதித்தல், பெண்ணுரிமை, போர் தவிர்த்து அமைதி தேடல் ஆகிய முக்கிய கருத்துக்கள் ஓராண்டளவாக தயாரிக்கப்பட்ட இந்த ஆவணத்தில் இடம் பெற்றுள்ளன.

5-2-2019 -இல், அபுதாபி, சையது விளையாட்டு அரங்கில் திருத்தந்தை நிறைவேற்றிய திருப்பலியில் 1,50,000 கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர். ஐக்கிய அமீரக வரலாற்றில் ஒரே சமயத்தில் இத்தனை பேர் ஒன்று கூடியது இதுவே முதல்முறை. முன்னதாக திருத்தந்தை தமது பார்வையாளர் வாகனத்தில் பவனி வந்த போது இரு சிறுமிகள் காவல் அரணைக் கடந்து திருத்தந்தையை நோக்கி ஓடியது மற்றும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

**தேவதூதர்களை பேய்களாக்கியது அகம்பாவம்; மனிதர்களை தேவதூதர்களாக்கியது தாழ்ச்சி. - புனித அகுஸ்தின்.**

வாரச் சிந்தனை

**ஆண்டின் பொதுக்காலம் 7-ம் ஞாயிறு (24-2-2019)** எரே.17:5-8 1கொரி.15:12.16-20 லூக்.6:17,20-26

# "வித்தியாசமாக வாழ முயல்வோம்"




**அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்**
துணை முதல்வர்,
பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.


"**டே**ய் மணி! ஸ்கூல் முடிஞ்சு இப்பதான் வீட்டுக்கு வந்த, அதுக்குள்ளே விளையாட்டா? உங்க க்ளாஸ் மிஸ் இன்னைக்கு எதுவும் ஓம் வொர்க் தரலையா?" என்று கேட்டாள் அம்மா. "கொடுத்திருக்காங்க அம்மா! நான் கொஞ்ச நேரம் விளையாடிட்டு வந்து அப்புறம் படிக்கிறேம்மா" என்றான் நான்காம் வகுப்பு படிக்கும் மகன். "ஆண்டி, மணி எங்க இருக்கிறான்?" என்றான் பக்கத்து வீட்டுப் பையன். "இப்பத்தான் விளையாடப் போனான். ஏம்பா கொஞ்ச நாளா ஆளை காணோம்? முன்னாடிலாம் விளையாட வருவ, இப்ப வர மாட்ற?" என்றார் அந்தத் தாய். "ஆண்டி ஒரு வாரமா உடம்பு சரியில்லை எனக்கு. அதான் மணிட்ட கிளாஸ் மிஸ் என்ன பாடம் நடத்துனாங்க, என்ன ஓம் வொர்க் குடுத்தாங்க அப்படின்னு கேட்டுனு போகலான்னு வந்தேன்" என்றான் பக்கத்து வீட்டுப் பையன். "மணி இங்க வா! ஜோஷி வந்திருக்கிறான். என்னன்னு கேள்" என்றாள் தாய். "மணி! இன்னைக்கு கிளாஸ் மிஸ் என்ன ஓம் வொர்க் கொடுத்தாங்க?" என்று கேட்டான் ஜோஷி. "இல்லடா! இன்னைக்கு ஒன்னுமே கொடுக்கலடா" என்று கூறிவிட்டு வேகமாக ஓடினான் மகன்.

பக்கத்து வீட்டுப் பையன் ஜோஷி சென்றவுடன் தன் மகனை அழைத்து அந்தத் தாய், "மணி இங்க வா! இப்பத்தான் ஓம்வொர்க், விளையாடிட்டு வந்து செய்றனு சொல்லிவிட்டு ஓடின" என்று கேட்டாள். "இல்லம்மா அன்னைக்கு ஒருநாள் நல்ல மழை, நான் வீட்டுக்குவர முடியாம ஸ்கூலுக்கு வெளியே நின்னுட்டு இருந்தேன். அவனுடைய அப்பா அவனை வண்டியில் போகலாம் கூட வான்னு சொன்னாரு. ஆனா அவன்தான் என்ன வேணான்னு சொல்லிட்டாம்மா" என்றான் மகன். "மணி அப்படிலாம் பழிவாங்க கூடாது. பகையை வளர்க்கக் கூடாது. இப்ப சின்ன வயசுல செஞ்சா. இன்னும் பெரிய வசுல நிறைய பழிவாங்குவ. இப்பவே போய் உடனே மன்னிப்பு கேட்டு அவன்ட உங்க க்ளாஸ் மிஸ் நடத்துன பாடத்தையும், ஓம்வொர்க்கையும் சொல்லிவிட்டு வா" என்று தன் மகனை அனுப்பினாள் அந்தத் தாய்.

**பகைவருக்கு அன்பு:** நம்மை அன்பு செய்பவர்களையே மீண்டும் அன்பு செய்வது மிகவும் எளிதான செயல். ஆனால் பகைவர்களை அன்பு செய்வது என்பது மிகவும் கடினமான செயல். பகைவரை அன்பு செய்ய ஆரம்பிக்கும்போது நம் உள்ளத்தில் நிம்மதி நிரம்பி வழிகிறது. மாறாக பழி வாங்க வேண்டும் என்று துடிக்கும்போது நம் தூக்கத்திலும், தனிமையிலும், செப நேரங்களிலும், எல்லா நேரங்களிலும் அவர்களைப் பற்றியே நாம் எண்ணிக் கொண்டிருப்போம். இதனால் கோபமும், மன உளைச்சலும், உடல் நோய்கள் தான் மிஞ்சும். பிறரை பழிவாங்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுபவர்கள், கண்ணாடி வீட்டிற்குள் இருந்துகொண்டு வெளியில் இருப்பவர்களை நோக்கி கல் எறிபவர்களுக்கு சமமாக இருக்கிறார்கள். வெளியில் இருப்பவர்களை காயப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கல் எறிகிறோம். பாதிக்கப்படுவதோ நம் கண்ணாடி வீடுதான். இதேபோல் பிறரை பழிவாங்க வேண்டும் என்று திட்டங்கள் தீட்டுகின்றபோது பாதிக்கப்படுவதோ நம் உடலும் மனமும்தான். இதற்கு மாறாக நமக்கு எதிரானவர்களை மன்னிக்கின்றபோது, நமக்கு நாமே போட்டுக்கொண்ட கோபம், பொறாமை, பழி வாங்கல் போன்ற விலங்குகளை உடைத்தெறிந்து, விடுதலை பெற்ற மக்களாக மாறுகிறோம்.

**விவிலியப் பின்னணி:** இன்றைய நற்செய்தியில் நாம் கேட்ட இறைவார்த்தைகள் கலிலேயா நாட்டின் திபேரிய கடற்கரை அருகில் இயேசுவால் சொல்லப்பட்டவை. இக்கலிலேயா மக்களும், இவர்களின் மூதாதையர்களும் தொடர்ச்சியாக பல வெளிநாட்டினரால் ஒடுக்கப்பட்டனர். பாபிலோனியர்களில் ஆரம்பித்து, பாரசீகர்கள் கிரேக்கர்கள், இறுதியாக உரோமையர்கள் (இயேசு வாழ்ந்த காலம்)என்று பல்வேறு குழுக்கள் இம்மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். இதனால் உரோமையர்களுக்கு எதிராக பல விடுதலைப் போராட்ட குழுக்கள் கலிலேயாவில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. யூதாஸ் எசேக்கியா என்பவர் தலைமையில் பல யூதர்கள் உரோமையர்களுக்கு எதிரான கலகத்தில் ஈடுபட்டனர். கலகத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக உரோமையர்கள், 2000 கலிலேயர்களை சிலுவையில் அறைந்து கொன்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் உரோமையர்கள் மீதும், மற்ற பகைவர்கள் மீதும் தீராத கோபம் கொண்டு பழிவாங்க வேண்டும் என்ற சிந்தனையோடு வாழ்ந்த மக்களைப் பார்த்து, 'பகைவர்களை அன்பு செய்யுங்கள்' என்ற கடினமான செய்தியை இயேசு பறைசாற்றுகின்றார். இன்றைய முதல் வாசகமும் பகைவரை அன்பு செய்ய வேண்டும் என்ற செய்தியையே சொல்கிறது. தன்னைக் கொல்ல முயற்சி செய்த, தன் எதிரி சவுலைக் கொல்லாமல் பெருந்தன்மையோடு மன்னித்த தாவீதைப் பற்றி வாசிக்கக் கேட்டோம்.

**வித்தியாசமாக வாழ முயல்வோம்:** கிறிஸ்துவின் போதனைகளில் தனித்துவம் மிக்கதாக விளங்குவது 'பகைவருக்கு அன்பு' என்ற படிப்பினை. "உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்... மன்னியுங்கள்" என்று இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகிறார். இந்த இயேசுவின் வார்த்தைகள் யாருக்கோ, எப்போதோ, எங்கேயோ சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. மாறாக அறிவியல் முன்னேற்றம், ஊடக வளர்ச்சி என்று அதிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற இக்காலக் கட்டத்தில், திரைப் படங்கள், சின்னத்திரை, தொடர் நாடகங்கள், இணைய தளம் என்று வலையில் சிக்கிக்கொண்டுசுயநலத்தோடு வாழவேண்டும், பிறரை பழிவாங்க வேண்டும், தீர்த்துகட்ட வேண்டும் என்ற கடினமான உள்ளத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து இன்று இயேசு கூறும் வார்த்தைகள். பிற அரசியல் மற்ற சமய சட்டங்களுக்கும் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உள்ள மிகப்பெரிய விச்சியாசம் இந்த பகைவருக்கு அன்புதான். இந்த ஒன்றுதான் கிறிஸ்தவர்களாகிய நம்மையும் பிற மக்களையும் வித்தியாசப்படுத்துகிறது. இந்த நவீன உலகில் எல்லாருமே வித்தியாசமாக வாழ வேண்டும், எல்லாவற்றையும் வித்தியாசமாக செய்ய வேண்டும் என்று விருப்பப்படுகிறோம். சாப்பிடுகின்ற உணவில் அணிகின்ற உடையில், நம்முடைய கலாச்சாரத்தில் எல்லாவற்றிலும் நவீனத்தையும், புரட்சியையும் புகுத்தி வித்தியாசப்படுத்த விரும்புகிறோம். அதேபோல் பகைவரிடம் அன்பு - வெறுப்போருக்கு நன்மை - சபிப்போருக்கு ஆசி - இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுதல் - கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னம் - மேலுடையை எடுத்துக் கொள்பவனுக்கு அங்கி - எடுத்துக்கொள் வோரிடம் திருப்பி கேட்காதிருத்தல் என்ற இயேசுவின் வித்தியாசமான சவாலை நாமும் ஏற்கத் தயாரா? இந்த அத்தனையும் வாழ்ந்த சாதாரண மனிதர்கள் இன்று புனித ராகியுள்ளனர்.எனவே நாமும் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு வித்தியாசமாக வாழ முயல்வோமா?



## இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (13)

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**1. "என் மேலுடையைத் தொட்டவர் யார்?"** (மாற் 5:30)

வினாக்களில் **"அறி" வினா, "அறியா வினா"** என்று இரு வகைகள் உண்டு. அறிவினா என்பது பதிலைத் தெரிந்துகொண்டே கேட்பது. உதாரணமாக ஆசிரியர்கள் மாணவர்களிடம் கேட்கும் கேள்வி அறிவினா.

இயேசுவுக்குத் தன்னைத் தொட்டவர் யார் என்று நன்றாகவே தெரியும். ஆனாலும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டது மட்டுமல்ல், தொட்டவர் யாரென அறியத் திரும்பிப் பார்த்தார். இங்கு இயேசு பெருமைப்படுத்த விரும்பியது, தன் மேலுடையைத் தொட்ட பெண்ணின் நம்பிக்கையை. அதற்கு அவருடைய சீடர்கள் அவரிடம், "இம்மக்கள் கூட்டம் உம்மைச் சூழ்ந்து நெருக்குவதைக் கண்டும் "என்னைத் தொட்டவர் யார்? என்கிறீரே!" என்றார்கள்.

தொடுவதற்கும் நெருக்குவதற்கும் இயேசுவுக்கு வேறுபாடு தெரியும் ஆனால் சீடர்களுக்குத் தெரியவில்லை. எந்த எண்ணத் தோடு தொடுகிறார்கள்? எந்த எண்ணத்தோடு கேள்விகளைக் கேட்கிறார்கள்? எந்த எண்ணத்தோடு முத்தமிடுகிறார்கள்? என்ற வேறுபாடுகள் எல்லாம் இயேசுவுக்கு நன்றாகத் தெரியும்.

**2."ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை?"** (மாற் 5:39)

சாவு வீட்டில் அமளி இல்லாமலா இருக்கும்? அழுகை இல்லாமலா இருக்கும்? அப்படி இருக்க இவை இயேசுவின் அறியா வினாக்கள்தானே? இயேசு தான் செய்யப் போவதை அறிந்திருந்ததால் அறிவினா எனலாமா? இல்லை. மனிதராய்ப் பிறந்த எல்லோருமே இறப்பது இயற்கை. இதற்குப் போய் அலட்டிக்கொள்ளலாமா? என்பதுபோல உள்ளது இயேசுவின் கேள்வி. மேலும் இயேசுவைப் பொருத்தமட்டில் **இறப்பு என்பது உறக்கம். பாவம் என்பது இறப்பு.** ஊதாரி மகன் உவமையில் தந்தை மூத்த மகனிடம் "உன் தம்பி இறந்திருந்தான். இப்போது உயிர் பெற்று வந்துள்ளான்" என்றார்.

மேலும் இயேசு இந்தக் கேள்விக்குப் பதிலை எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஆறுதல் அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

**3. "நலம் பெற விரும்புகிறீரா?"** (யோவா 5:6)

நோயுற்றவர் நலம் பெற விரும்ப மாட்டாரா என்ன? இது என்ன தேவையில்லாத கேள்வி. எனவேதான் நோயாளியும் அதற்குப் பதில் கூறாமல் "ஐயா, தண்ணீர் கலங்கும்போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை. நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கிவிடுகிறார்" என்று உடல் நலமற்றவர் அவரிடம் கூறினார்.

அதிக நாட்கள் நோயுற்றுப் பிறரின் பணிவிடைகளைப் பெற்ற சில நோயாளிகள் உண்மையாகவே நலமடைய விரும்புவதில்லை என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

ஆனால் இயேசு சந்தித்த நோயாளி அப்படிப்பட்டவர் அல்லர். அவரைப் பின்னர் ஒரு நாள் இயேசு சந்தித்தபோது "இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர், இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதீர்" என்றார். எனவே இயேசு கேட்ட கேள்வி இங்கே நமக்குப் புரிகிறது. அதாவது நலமடைய விரும்பினால் அவர் தன் பாவ வாழ்வை விட்டுவிட வேண்டும்.

**4. "கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்?"** (யோவா 5:44)

இது புரிந்துகொள்ள முடியாத புதிரான கேள்வி. பெருமையை நாடுவதற்கும் இயேசுவை நம்புவதற்கும் என்ன தொடர்பு உள்ளது? இதே அதிகாரத்தில் 41-ஆவது வசனத்தில் இயேசு சொல்கிறார்: "மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவையில்லை." இப்படி மனிதருடைய தயவை நாடாதவர்களால்தான் இறைவனுக்கு உகந்தவர்களாக இருக்க முடியும். மேலும் மனிதர் தரும் தயவைத் தேடும்போது ஏமாற்றங்கள் வர வாய்ப்புகள் உண்டு. இந்தக் கேள்வியால் இயேசுவைப் போல நாமும் சுதந்திரமாக வாழ வழி காட்டுகிறார்.

**5. "அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை என்றால் நான் சொல்லுபவற்றை எவ்வாறு நம்பப் போகிறீர்கள்?"** (யோவா 5:47)

யூதர்களின் கூற்றைக் கேள்விக்குள்ளாக்கும் கேள்வி இது. மோசே பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்கிறீர்கள். ஆனால் உங்கள் மேல் குற்றம் சுமத்தப் போகிறவன் நான் என நினைக்காதீர்கள். உங்கள் சார்பாக நிற்பார் என நீங்கள் எதிர்பார்க்கும் மோசேயே உங்கள் மேல் குற்றம் சுமத்துவார்... அவர் என்னைப் பற்றித் தான் எழுதினார். அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை. ஒருவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசும்போது எப்படி அவர் பேச்சில் நியாயம் இருக்க முடியும்?

**6. "காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றி தரையில் விழாது."** (மத் 10:29)

அச்சம் நீக்கி துணிவு தரும் கேள்வி. ஏனெனில் சீடரை நற்செய்தியைப் போதிக்க அனுப்பும்போது அவர்களுக்குக் காத்திருக்கும் துன்பங்களைக் கூறுகிறார், அவற்றுக்கு அஞ்ச வேண்டாம் என்று அறிவுரை கூறும்போது சிட்டுக் குருவிகளின் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறார். மிக மலிவாக விற்கப்படுவது சிட்டுக்குருவி. அவற்றுக்குக் கூட தந்தையின் சிந்தையில் இடம் உண்டு.

**7. "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?"** (யோவா 6:5)

பரிவிரக்கத்தில் பிறந்த கேள்வி இது. இதில் மக்களுக்கு உணவில்லையே என்ற கவலையும் கலந்துள்ளது. வாங்க பணம் இருந்தாலும் கடைகள் இல்லாத வனாந்திரத்தில் எங்கே வாங்குவது? மக்கள் உணவு மறந்து உறக்கம் மறந்து அவருடைய போதனையைக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் மக்களிடம் தன் போதனைக்கு வரவேற்பு இருக்கிறது என்பதால் அவர்களுடைய பசியை அறியாதவராக அவர் இல்லை. "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல. மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" (மத் 4:4). இப்போது தன் வாய்ச்சொல்லாலேயே உயிர் வாழட்டும் என்று விட்டுவிடவில்லை.

**8. "உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன?"** (மாற் 6:38)

பதுக்கலை ஒழித்துப் பகிர்வுக்கு அழைக்கும் கேள்வி. பகிர்ந்துகொள்ள மனமிருந்தால் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன் துண்டுகளையும் கொண்டு ஐயாயிரம் பேருக்குக் கூட உணவளிக்க முடியும். இன்றைய உலகிலும் மக்கள் எல்லோரும் பசியாறும்படி உண்ண கடவுள் போதிய உணவைப் படைத்துள்ளார். ஆனால் பசியால் உயிர்விடும் குழந்தைகளும் பெரியவர்களும் ஏராளம். அன்று இயேசு கேட்ட கேள்வியை நம்மிடம் கேட்டால் என்ன பதில் சொல்வோம்?



# வரலாறு வழி வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

**ம**னித குலத்தின் கடந்தக் காலப் பயணம், இன்று நமக்கு வரலாறாக வருகின்றது. இன்று நமது வாழ்வு வரும் தலைமுறைக்கு வரலாறாகும். இவ்வாறு வரலாற்று கண்ணோட்டத்தில் மனித குல வாழ்வை நாம் கண்டால் வியப்புக்குரிய செய்திகளைப் பெற்று, நாமும் கற்றுக் கொண்டு, பயணத்தைத் தொடர இயலும். மனித வரலாற்றில் இரு துருவங்களையும் அவைக்கு உட்பட்டவைகளையும் நாம் இரசிக்க இயலும். வளர்ச்சியைக் கண்டு கட்டி எழுப்புவோம்.

**இயற்கையோடு:** மனித வரலாற்றில் ஆரம்பத்தில், ஓரளவு புரிந்துகொள்ள இன்பவன அனுபவத்தை உணர்வோம். முதற்பெற்றோர்கள் இயற்கை வழங்கி வந்த பழம், காய், கனி இவைகளை உண்டு வந்தார்கள். அடுப்புக்கு வேலை இல்லை. ஆண் பெண் சமத்துவம் செழிப்பாக இருந்தது. இயற்கையோடு இணைந்த வாழ்வு இறைவனோடு இணைந்த வாழ்வாக இந்தியாவிலும் இருந்தது என்று நாம் பெருமிதம் கொள்வோம்.

**விளைநிலம்:** முதல் மனிதர்கள் கனிகளைச் சுவைத்து விதைகளை வீசிய போது, அவை முளைத்து வரும் அதிசயங்களைக் கண்டார்கள். எனவே நிலத்தை விளை நிலமாகப் பயன்படுத்தி பயிர்த்தொழில் பணி இடம் பெற வளர்ச்சி உதவியது. மனித இனம் பெருக விளைநிலங்களின் உரிமை சிக்கலை ஏற்படுத்தி, பதிவு செய்ய முயன்றனர். வளர்ச்சியில் வேதனையும் வேதனையில் வளர்ச்சியும் என்று நமது முன்னோர்கள் வளர்ந்து வந்தார்கள். மக்கள் இனம் பெருகப் பெருக நில உடமை நிஜமாகிறது.

**தொழில் புரட்சி:** கடவுள் கொடுத்த கை கால்கள் முதலில் ஈடுபட்டன. பின்பு கற்கள் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட, இயந்திரங்கள் இடம் பெற்று, இன்று எல்லாவற்றையும் இயந்திரங்கள் மேற்கொள்ள, மனிதர்களின் உடல் உழைப்பு இல்லாமல், உடல் மருத்துவமனைகளில் உழைப்பது எல்லாவற்றையும் செலவு செய்து, உயிரையும் உடலையும் இயந்திரம் வழி பேணி வருகின்றார்கள். என்னே வளர்ச்சியும் வீழ்ச்சியும்!

**இன்று மனிதம் :** இன்று உலகில் உள்ள மக்களின் வாழ்வை உணர்ந்து பார்த்தால் பல செய்திகள் புலப்படும். கடவுள் என்றும் எப்போதும் மனித குலத்தை மறப்பதில்லை, கண்காணித்து வருவது நூற்றுக்கு நூறு உண்மையாகும். மனித குலம்தான் தெரிந்தோ தெரியாமலோ, உணர்ந்தோ உணராமலோ கடவுள் உணர்வை சரியாக முழுமையாக, முதன்மையாக, முக்கியமாக வளர்க்க நம்பிக்கையில் பலவீனம் உள்ளவர்களாய் இருப்பதை உணர்ந்து, வாழ்வின் ஊற்றாகிய அவரிடம் மீண்டும் திரும்ப வருவோம்.

**இறைமையே மனிதம்:** அவர் இன்றி அணுவும் அசையாது என்று நன்றாகச் சொல்கின்றோம். ஆனால் அன்றாட அனுபவத்தில் நாம் பொதுவாக அதை சுவைப்பதில்லை. அவரது சாயலாகப் படைக்கப்பட்டதை, இயேசுவின் மனித அவதாரத்தில் தெளிவுபடுத்தியும் இன்றைய மனித குலம் இறைவனின் பிள்ளைகள் போல வாழ்வது பலவீனமாக வுள்ளது. தசவதாரம் எடுத்து மனித குலத்தை மீட்டாலும் மனிதம் மாறாமல் இருப்பது நமது பலவீனத்தின் பலத்தைத்தான் வெளிப்படுத்துகிறது. இருப்பினும் கடவுள் நம்மை கைவிடமாட்டார்.

**இந்தியர்கள்:** பாரத நாட்டின் மக்கள் மிகவும் பேறு பெற்றவர்களாய் இருந்தும் நடைமுறையில் நமது மக்களை இன்று காணும் போது கவலையே நம்மை மேற்கொள்கிறது. மிகவும் பழமை வாய்ந்த நல்லப் பண்பாட்டை நாம் பெற்றிருப்பினும் நமது மனித நேயம் இன்னமும் வளப்படுத்தப்படவேண்டிய நிலையில்தான் உள்ளது. இந்தியர்களில் பலப் பிரிவுகள் இருப்பினும் யாரையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் பொதுவாகக் காணும் போது, ஏன் இன்னமும் நாம் சிறந்தவர்களாய், ஒருங்கிணைக்கப் பட்டவர்களாய் வாழவில்லை என்பது புதிராக உள்ளது.

**வாய்மை வெல்க:** வாய்மையே வெல்லும் என்பது நமது பழமொழி. இருப்பினும் அது புதுமொழியாக, இன்று நம்மால் கடைபிடிக்கப்படுவதாக இல்லையே என்பதுதான் கடின மாகவுள்ளது. ஒருவருக்குள்ளும் ஒரு குழுவினுக்குள்ளும் நிறைய முரண்பாடுகள், மோதல்கள், பிளவுகள், உரசல் கள், விரிசல்கள் இருப்பதை சரி செய்வது தேவைப்படுகிறது. கலப்படம் இல்லாத வாழ்க்கை முறையை, வியாபார முறையை, சமூக உறவைக் காண்பது கடினமாக உள்ளது. கடந்த காலத்தைவிட இன்று நாம் படிப்பில் வளர்ந் திருப்பினும் வாய்மையின் சிகரத்தை அடைய முடியவில்லை.

**ஆழத்தைத் தேடி:** விளிம்பில் வாழ்வு வலம் வந்தால் நேரத்திற்கு நேரம் நாம் வேறுபடுவோம், மாறுபடுவோம், நிலையாக உண்மையில் நிற்க இயலாது. உணர்வு களையும், சிந்தனைகளையும் கடந்து நமது நேர்மையான, கூர்மையான மனசாட்சியை அடைந்தால் வாய்மைக்கு வாய்ப்புண்டு. ஆன்மீக உணர்வும் இறை உணர்வும் நம்மில் மலரவும் வளரவும் முற்பட்டால் மெய்மை மலரும். அவசர உலகில் சிந்திக்காமல், சீக்கிரம் சொற்களைத் தெளித்து விட்டு கடந்து விடுகின்றோம். அவசர வாழ்வுக்கு ஆதாரம் நமது உணர்ச்சிகள். உணர்ச்சிகள் நிலையாக நம்மில் எப்போதும் இருப்பதில்லை, உணர்ச்சிகள் அலைகளைப் போல நம்மையும் அயலாரையும் மோதிக்கொண்டே இருக்கிறது.

**வரலாறு படைப்போம்:** இக்காலக்கட்டத்தில் வாழும் நாம், நம்மை நாமே கட்டி எழுப்ப விழித்தெழுவோம். சிறப்பாக இளம் உள்ளங்கள் வீறுகொண்டு எழுந்தால் வெற்றியைப் பெற இயலும். இன்றைய தொடர்பு சாதனங்கள் மெய்மைக்கு உதவுவதைவிட பொய்மைக்குத் துணைபோவதை, சாதனங்கள் திருத்திக்கொள்வது முறை. ஆனால் சாதனங்கள் பெரிய முதலைகள் வலைகளில் சிக்கி உள்ளதால் விடுதலைக்கு வாய்ப்பில்லை, வியாபாரத் திற்குத்தான் வழிஉண்டு. இத்தகைய போக்கினை அப்படியே விட்டுவிட்டால் நிலமை இன்னமும் மோச மாகத்தான் நம்மை மூழ்கடிக்கும். விழித்தெழுவது தான் சரியான பாதையாகும். வழங்குவதை எல்லாம் அப்படியே விழுங்காமல், தேர்ந்து தெளிவு பெற்று, நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, அல்லவைகளை அகற்றிடு என்றாலும், நமது பலவீனத்தில் பலவீனங்கள் தான் நம்மை ஈர்க்கின்றது. மனசாட்சிக்கும், இறைவனின் குரலுக்கும் செவிசாய்த்தால் உறுதியாக வெற்றியைப் பெற இயலும். முயன்றுமுன்னேற முற்படுவோம். ●


## Wanted Bride

Wanted a R.C. bride, Doctor or Lecturer from God fearing family aged between 28 to 32, for a R.C. groom M.S. (ortho) aged 35, working as a Surgeon in a well reputed Medical College in Bangalore.

*Contact:* 9880129828, 0824 - 2444153



339ஆவது பிறந்தநாள் பெருமங்கலம் காணும்

## வண்டமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்

*பேராசிரியர் முனைவர்* **பா. வளன் அரசு,**
*பாளையங்கோட்டை.*



ஆரிய வளன் (பாயிரம்) எனவும், ஆரிய சோசுவன் (15:106) எனவும் இருநிலைகளில் அகப்புறப் போராட்ட வீரர்களை வீரமாமுனிவரின் தேம்பாவணி எடுத்தியம்புகிறது. இறைமகன் இயேசுவும், அன்னை மரியாளும் சிற்சில இடங்களில் வந் தாலும் சிறப்பிடம் பெறுகின்றனர். வளனது வாழ்வு அவ்விரு வரையும் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பு உடையதாகிறது.

துன்பத்தைக் கண்டு நிலைகுலையாது நிற்க வேண்டும். கடலை நாடிச் செல்லும் வெள்ளம் போன்று, நாம் கடவுளை நாடிச்செல்லும் உள்ளம் உடையவராக வேண்டும். தீயவற்றைத் தீயாகக் கருதி நீக்க வேண்டும்; வாழ்வு நீர்மேற்குமிழி என்பதை உணர வேண்டும்; ஆன்மாவைப் பேணிக் காத்திட வேண்டும். வானகத்தை விரும்பி வாழ்ந்திட வேண்டும் என்று எசித்து நாட்டு மக்களுக்கு வளன் விளம்பிய அறிவுரைகள் குறிப்பிடத்தக்கவை:

*வரையெனத் துயரிற் போன்மின், வாருதி நாடி ஓடும்*
*திரையெனஇறைவன் சேர்மின், தீயென அகன்மின் தீய,*
*நுரையென வாழ்க்கை காண்மின், நோயென உயிரைக் காமின்*
*கரையெனக் கதியை வெ்.குமின் கசடறு நெறியிது என்றான்*
*(30:8)*

சிலுவையே மீட்பின் மையமாகவும், உயிர்நாடியாகவும் திகழ்கிறது (30:119) மெய் இறைமையின் நிலை (27:154). இறை மகன் இயேசுவின் தெய்வீக மானுட இயல்புகள் (31:93) வறுமை யும் செல்வச் செழுமையும் மக்களினத்தை அணைக்கும் இரு கைகள் (27:100) ஆகிய கருத்து மணிகள் கவின் மிக்கவை.

*உலகம் சுற்றிய தமிழர்* ***சுத்தானந்த பாரதியார்*** *கூறுவது போன்று,*
*"வீரமா முனிவர் தைரிய நாதர் விரிதமிழ்க் கலைமணம் கமழும்ட*
*ஆரமா முனிவர் அகத்தியர் போலே அருளினார், அரிய நன்னூல்கள்*
*சாரமாம் தேம்பா வணியைத் தொடினும் தமிழ்மணம் கமழும் என்கரமே*
*ஈரமாய் நெஞ்சில் இடம்பெற நட்டால் இன்பமாய் மலரும் என் வாழ்வே"*

**9.சித்த மருத்துவ நூலாக்கம்:** எசித்து நாட்டு ஊழியர் நாமான் தொழுநோயிலிருந்து நலம் பெற இறைவாக்கினர் எலிசா ஆற்றுப்படுத்திய செய்தியை விவிலியத் திருநூல் விளம்புகிறது. இறைமகன் இயேசு நோய்வாய்ப்பட்டோரை நலம் பெறச் செய்தும், பேய் வாய்ப்பட்டோரை விடுவித்தும் அன்பு மொழிகளாலும் பரிவுப் பார்வையாலும் மீட்டருளினார். திருமறைத் தொண்டராக வாழ்ந்த வீரமாமுனிவர் மருத்துவத் துறையிலும் முத்திரை பதித்தமையால் அமலவைக் கன்னியர் வீரமாமுனிவர் மருந்தகத்தை மதுரை போன்ற இடங்களில் நடத்திவருகின்றனர். வீரமாமுனிவர் மருந்து மாத்திரைகள் பல்லாண்டுகளாகப் புழக்கத்தில் உள்ளன. **வைத்திய நசகாண்டம்** என்னும் நூலில் வீரமாமுனிவர் **முப்பது மருந்து களின் செயல்முறை**களைச் செப்பியுள்ளார். இந்நூலைப் போளூர் நாராயணசாமி பதிப்பித்துள்ளார். இறைவனுக்கும் மரியன்னைக்கும் வணக்கம் கூறி இந்நூல் தொடங்குகிறது. வீரமாமுனிவரின் **இரணவாகடம்** என்னும் மருத்துவ நூலை வேங்கடாசலமும், **அநுபோக வைத்திய சிகாமணி** யை வாசுதேவனும் பதிப்பித்துள்ளனர். 8-8-1899 அன்று தவத்திரு. கௌசானல் அடிகளார் பாளையங்கோட்டையிலிருந்து எழுதிய மடலில் வீரமாமுனிவர் மருத்துவ நூல்களை எழுதிய செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார். பாரத மருந்து மற்றும் அழகுப் பொருட்கள் சட்டம் என்னும் நூலில் சித்த மருத்துவ மருந்து செய்முறைகள் தொடர்பான பதினெட்டு நூல்கள் பார்வை நூல்களாகும்; அவற்றுள் ஒன்றாக வீரமாமுனிவரின் நசகாண்டம் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**10. சிறுகதைத் தோற்றம்:** வீரமாமுனிவர் எழுதிய **பரமார்த்த குருவின் கதைகள்** என்னும் **எட்டுச் சிறுகதைகள்** கொண்ட நூலே தமிழில் எழுந்த முதல் உரைநடைச் சிறுகதை நூலாகும். **ஐம்பத்து நான்கு மொழிகளில்** மொழி பெயர்க்கப் பட்ட இச்சிறுகதைத் தொகுப்பு நகைச்சுவை நிறைந்தது. பேச்சுத் தமிழ் நடைக்கு எடுத்துக்காட்டாகத் துலங்கும் பரமார்த்த குரு கதையில் நாட்டுப்புறக் கதைகளும், ஈசாப்பு கதையும், யூவனல் எழுதிய கதைக் குறிப்பும் இடம் பெற்றுள்ளன.

**11. சிற்றிலக்கிய எழுச்சி:** திருக்காவலூர்க்குக் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, தேவாரம், வண்ணக் கலைகள் ஆகிய சிற்றிலக்கிய ஏடுகள் வீரமாமுனிவரால் இயற்றப்பட்டவை. இறையன்பை வளர்க் கவும் நிறையின்பம் தளிர்க்கவும் துணை புரிவதே திருக் காவலூர்க் கலம்பகம். உலா என்னும் துறையை விலக்கி, **சமூக உல்லாசம்** என்னும் புதுத்துறையை இக்கலம்பகம் கொண்டுள்ளது. **திருவிழாக் காலத்தில் தேர்வலம் வரும்போது செய்யும் நடப்பு வருணனையாக** இது விளங்குகிறது. கன்னி மரியாளைக் கன்னிச் சங்காக உருவகித்துள்ளார் வீரமா முனிவர். **கருவில்லாக் கருத்தாங்கி கன்னித்தாயாகிய மரியாளின் மாண்பு** எடுத்து மொழியப்பட்டுள்ளது. பதினெட்டுத் துறை களுடன் இடைச்சி, வலைச்சி ஆகியவற்றையும் திருக் காவலூர்க் கலம்பகத்தில் காணலாம்.

*பாடிப் புகழ்ந்து படர்காவலூர் நங்கை*
*நாடி வணங்கும் நரரெல்லாம் - கேடிலரே*
*மண்ணவருள் மாசிலராய் வாழ்ந்திவண் மற்(று) ஒப்பிலராய்*
*விண்ணவருள் வீற்றிருந்தொப் பார் (100)*

என்னும் நேரிசை வெண்பா, அடைக்கல அன்னையின் அருள் பெற்றால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வண்ணவராக விளங்குவர் என்று தெளிவுறுத்துகிறது. திருக்காவலூர்த் திருத்தலம் செல்வார் ஐவகைப் பயன்கள் பெறலாம். 1) துன்பங்கள் நீங்கும். 2) மாசற்றவர் ஆவர், 3) ஒப்பற்றவராக உலகில் வாழ்வர், 4). கிறித்துவின் ஒளியாக மிளிர்வர், 5) விண்ணக இன்பம் பெறுவர் என்று விரித்துரைக்கிறார் வீரமாமுனிவர்.

- தொடரும்...

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அருட்தந்தை C. ஜெரால்டு புஷ்பராஜ் அவர்களின் சகோதரி. திருமதி. **சூசான்** அவர்கள் 5-2-2019 அன்று இறையடி சேர்ந்தார். 6-2-2019 அன்று மாலை 4.30 மணிக்கு காரைக்கால் தேற்றரவு அன்னை ஆலயத்தில், நமது உயர் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு. ஆ. அருளானந்தம் அவர்கள் தலைமையில் அன்னாரது அடக்கச்சடங்கு கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்குப் பின் காரைக்கால் கல்லறையில் அவரது திருவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. பிரிவால் துயருறும் அருட்தந்தை C. ஜெரால்டு புஷ்பராஜ் மற்றும் அவரது உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இறையடி சேர்ந்த திருமதி. சூசான் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. - ஆசிரியர்.



## துரோகப் பேரலைகள்

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**மூழ்கும் கப்பல்:** நாட்டில் தீர்க்க வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சனை இருக்கிறது. குடும்பம், சமுதாயம் மற்றும் அரசுகள் பற்றி ஊடகங்கள் சொல்லும் விஷயங்கள் கவலையளிப்பதாக இருக்கிறது. சிலரிடம் கள்ளத்தனம், பொய்மை மற்றும் துரோகம் இருக்கிறது. சில கணவன் மனைவி உறவிலே கள்ளத்தனம் இருக்கிறது. அதிலே கொடுமை என்னவென்றால், ஒரு புதிய சட்டம் அந்த கள்ள உறவு குற்றமில்லை என்று சொல்கிறது.

**சதிகார நண்பன்:** சில நண்பர்கள் சதிகாரர்களாக இருக்கிறார்கள். சமுதாய நண்பர்கள், ஒரே கட்சி நண்பர்கள் மற்றும் அரசியல் நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இல்லை. பெருவாரியான மக்கள் சதி மற்றும் துரோகம் செய்யும் சமுதாயம் எப்படி மேம்படும்? துரோகத் திலே வாழும் ஒரு குடும்பம் எப்படி மகிழ்ச்சி மற்றும் நிம்மதியாக இருக்கும்?

**தோண்ட தோண்ட கள்ளத்தனம்:** இப்பொழுது யாரைத்தான் நாம் நம்பி பழகுவது, இணைந்து செயல்படுவது, மேலும் மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொண்டு செல்வது. கள்ளத்தனமான சூழ்நிலை எல்லா அரசு மற்றும் தனியார் துறைகளிலும் இருக்கிறது. தோண்ட தோண்ட நிலக்கரி மற்றும் தங்கம் கிடைத்தால் பரவாயில்லை, சிலைகள் அல்லவா கிடைக்கின்றன? கோயில் கதவுகளைத் திறந்தால் பாவ இருள் காணாமல் போயிருந்தால் பரவாயில்லை, 'சாமிகளின்' பொன் முடிகள் அல்லவா காணாமல் போயிருக்கின்றன? மந்திரி வீட்டை சோதனை செய்தால் ஊழல் ஆதார சீட்டுகள்; புதிய ரூபாய் நோட்டுகள் நான்காயிரத்திற்காக கோடான கோடி பாமர மக்களான நாம் வங்கி முன் வீதியில் வரிசையில் நிற்க, சிலப் பெரியவர்கள் வீட்டில் மட்டும் எப்படி கத்தை கத்தையாக புதிய இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் கண்டெடுக்கப்பட்டன? போலீஸ் துப்பாக்கி சூட்டில் பதிமூன்று அப்பாவி தேச பக்தர்கள் கொல்லப் படுகிறார்கள்; ஆனால்! மாண்பு மிகு முதல்வர் "எனக்குத் தெரியாது. உங்களைப் போல் நானும் தொலைக்காட்சியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்" என்கிறார். எத்தனை பெரிய ஏமாற்றுத் தனம்?

**துரோக பேரலைகள்:** இத்தகைய கள்ளத்தன சூழல்களில் யாரிடம் எதை எதிர்ப்பார்ப்பது? அந்த ஒரு தாய் நேர்மையாக இருந்தாள் என்று சொல்ல முடியுமா? தன் குழந்தையை அந்த ஏரியில் வீசிவிட்டுச் சென்றாள் என்று செய்தியில் பார்த்தோம். எந்த துரோகத்தை மறைக்க அல்லது கள்ள உறவிற்கு தடையாக இருக்கிறது இந்தக் குழந்தை என்று எண்ணி இந்த குழந்தை வீசப்பட்டது? அதன் தந்தை எங்கே பதுங்கிக் கொண்டான்? ஒரு தாய், மகளின் காதலுக்கு மறுப்புக் கூறினாள் என்று, காதலன் உதவியோடு தாயையே வெட்டி கொன்ற துரோகம் நம் மத்தியில் தான் நடத்திருக்கிறது. காவிரி நீர் பிரச்சனை, ஸ்டெர்லைட் பிரச்சனை, நெடுவாசல் பிரச்சனை எட்டு வழிச்சாலைப் பிரச்சனை, நீட் பிரச்சனை என மக்களுக்கு எதிராக அரசுகள் இழைக்கும் துரோகங்களும் உள்ளன என கூறப்படுகிறது. வியாபாரிகள், மருத்துவர்கள், பெருமுதலாளிகள் மற்றும் அரசு ஊழியர்களின் துரோகங்களை பட்டியலிட முடியாது. அரசியல்வாதிகளுடையதா சொல்லவே தேவையில்லை. உண்மையைக் கூறியவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்களாம். சாதி மற்றும் சமயத்தினருக்கு எதிரான சூழ்ச்சிகள் உலகம் அறிந்ததே.

**பொறுப்பாளர்கள் யார்?:** இப்படியாக உள்ள ஆபத்தான நிலைமை மாறியாக வேண்டும். ஏனென்றால், துரோகம், சமுதாயக் கப்பலை மூழ்கடிக்கும். மேலும், நாம் ஒருவரை ஏமாற்றுகிறோமென்றால், நாம் ஒருவரால் ஏமாற்றப் படுவோம் என்பது உறுதி. ஆகவே பெற்றோர், ஆசிரிய பெருமக்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமுதாய அழுத்தத்தின் அறநெறி பணி மிக இன்றியமையாதது. மகனிடம், "ஐந்து மதிப்பெண் குறைய நேர்ந்தாலும் பரவாயில்லை நேர்மை தவறாதே"; என்றும், மகளிடம், "சற்று தாமதித்து வீட்டிற்கு வர நேர்ந்தாலும் பரவாயில்லை, அம்மாவை ஏமாற்றாதே" என்றும் வலியுறுத்த வேண்டும்.

**என்ன செய்யலாம்?:** தேர்தலில் நாம் வாக்களிக்கும் போது, இருப்பவர்களில் ஒப்பீட்டளவில் நல்லவர்களைத் தேர்வு செய்யும் நமது கடமை முக்கியமானதாகும். "நான் நோட்டாவிற்கு போடுகிறேன்" என்று சிலர் வாக்களிக்கிறார்கள். நோட்டா பெரும்பான்மை பெற்றாலும் மறு தேர்தல் இல்லை. ஆகவே, நோட்டா நண்பர்கள் ஒரு வேட்பாளரை நிறுத்தி ஜெயிக்க வைக்கலாமே? நம் நாட்டு தேர்தல் முறை பணச் செலவை அவசியமாக்கிவிட்டது. மக்கள் பணத்தை வைத்து வாக்களிப்பதை நியாயப்படுத்த முடியாது. ஆனால், கட்சிகளின் பணதிணிப்புக்கு பிறகு, இருக்கும் தலைவர்களில் ஒப்பீட்டளவில் நல்ல தலைவரின் கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பது நலன் பயக்கும்.

**திடீர் தலைவர்கள்:** நல்லவர்களே இல்லை என்பது தவறாகும். நாட்டிற்காக தம் வாழ்க்கையை, பணியை, வீட்டை, உடல் நலனை, வாய்ப்புகளை, குடும்பத்தை இழந்தவர்கள் இருக்கிறார்கள். சிறை சென்ற நல்லவர்கள் உண்டு, வழக்கு போட்டு மக்களை காப்பாற்றுபவர்கள், தவறுகளை தடுத்து நிறுத்த முயலுபவர்கள் உண்டு. திடீர் சினிமா தலைவர்கள் முளைக்கிறார்கள். சினிமா மாயையை வைத்து நாற்காலிக்கு ஆசைபடுகிறார்கள். ஐந்தாண்டுகள் அவர்கள் மக்களுக்காக என்ன செய்கிறார்கள், அவர்கள் உண்மையில் யார் என்று பார்ப்போமே? அவர்களுக்கு வாக்களிப்பது தற்கொலைக்கு சமமாகக் கூடும்.

---

114 இளம் உள்ளங்களுக்கு

## பெரிக்கல்ஸ் வழங்கிய தண்டனை

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



*"நாகரீகத்திற்கான ஒரே தேர்வு சகிப்புத்தன்மையே"*

- ஆர்தர் ஹெல்ப்ஸ்

**ஆத்திரம் ஓர் அவலம்:** ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த முடியாத ஆத்திரம் பொதுவாக விலங்குகளுக்கு மட்டுமே உரிய ஓர் இழிவான அவலம். ஆறறிவால் விலங்கிலிருந்து மேம்பட்ட நிலையில் உள்ள மனிதன் கோபாவேசத்திற்கு இடங்கொடுக்கலாகாது.

**பெரிக்கல்ஸ்** (Pericles) **:** கிரேக்க நாகரிகத்தின் பொற்காலத்தில் ஏதன்ஸ் (Athens) நகரில் கி.மு.495 - கி.மு.429 ல் வாழ்ந்த பிரபலமான, செல்வாக்குள்ள கிரேக்க அரசியல் மேதை, சொல்வன்மை மிக்கவர், ஏதன்ஸின் இராணுவ தளபதி பெரிக்கல்ஸ்.

**ஆத்திரம் X அமைதி:** பெரிக்கல்ஸை விரும்பாத, வெறுப்புடன் கூடிய ஒரு நபர் பெரிக்கல்ஸின் மாளிகைக்கு வந்தான். பெரிக்கல்ஸ் அவனை இன்முகத்துடன் வரவேற்றார். கோபத்துடன் வந்த அவனை அமைதிப்படுத்த முயன்றார். அவனை இருக்கையில் அமரச்சொல்லி, தனக்கெதிராக அவன் மனதில் உள்ள வெறுப்புணர்வை அகற்ற தன்னிலை விளக்கமளிக்க தயாரானார்.

**விழலுக்கிறைத்த நீர்:** பெரிக்கல்ஸின் பெருந்தன்மையுடன் கூடிய கெஞ்சல்கள் அவனிடம் பலிக்கவில்லை. எவ்வளவுக்கதிகமாக பெரிக்கல்ஸ் அவனை அமைதிப்படுத்த முயன்றாரோ அவ்வளவுக்கும் அதிகமாக பகுத்தறிவு இல்லாத விலங்காகவே அவன் நடந்துகொண்டான். அக்காலக் கட்டத்தில் ஏதன்ஸ் நகரை மிக உயரிய நிலைக்கு கொண்டு வந்த பலம் பொருந்திய பெரிக்கல்சுக்கே இந்த நிலை! அந்த நபருடைய ஒரே குறிக்கோள் பெரிக்கல்ஸை வசைபாடி அவமதிப்பது! பெரிக்கல்ஸ் மாளிகை ஏவலர்கள் பொறுமையிழந்து பெரிக்கல்ஸிடம், "நாங்கள் இந்த மனிதனை இப்போதே வெளியே தூக்கி எறியலாமா?" என்று வினவினார்கள். ஆனால் பெரிக்கல்ஸ் அதை மறுத்து, "அவன் மனம் அமைதி யடைகிறவரை கத்தட்டும். அவன் அடக்கி வைத்துள்ள வசை மாரிகளையெல்லாம் ஆத்திரம் அடங்குமட்டும், தொண்டை வற்றும் வரை கொட்டட்டும். அவனை ஒன்றும் செய்யாதீர்கள்" என்றார்.

**ஆத்திரம் அடங்கியது, அறிவு விழித்தது:** பொழுது சாயும் வரை இது நீடித்தது. பெரிக்கல்சும் அவனுடைய அலுவலர்களும் அவனை சிறிதும் பொருட்படுத்தாமல் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டனர். அவனும் தொண்டை வற்றி, ஆத்திரம் அடங்கி அமைதியானான். இப்போது முற்றிலும் இருட்டத் தொடங்கிவிட்டது. அந்த மனிதன் தன் வீட்டிற்குச் செல்ல தயாரானான். பெரிக்கல்ஸ் மாளிகையைத் தவிர வெளியில் கும்மிருட்டு. இப்போது பெரிக்கல்ஸ் அந்த நபரிடம், "இரு நண்பா. விளக்குடன் என் ஆள் உன்னுடன் உன் வீடு வரை வருவான், மறுக்காதே" என்றான். பெரிக்கல்ஸின் இந்த ஆதரவான வார்த்தை அந்த நபரின் உள்ளத்தை தொட்டது. அவன் பெரிதும் வெட்கப்பட்டு இதய ஆழத்திலிருந்து வந்த வார்த்தைகளால் பெரிக்கல்ஸிடம் பெரிதும் மன்றாடி மன்னிப்பு வேண்டினான்.

**சிந்திக்க:** ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு; பொறுமை மலையினும் பெரிது.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**21-ஆம் படலம்**

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி "கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு" என்றார்.

காப்பியப் பாடல் 1068

**31 (விப.10:12) ஆண்டவர் மோசேயை நோக்கி, கல்மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர்பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின் மேல் உன் கையை நீட்டு என்றார்.**

பார்வோன் துரத்திய மோசேக்(கு) இறைவன்
கூர்வேல் என்றே அவர்தம் கையை,
எகிப்தே நடுங்க நீட்டெனக் கூறினார்;
முகிலின் இடியினைக் கேட்டதிர் நாகம்
நடுங்கி ஒடுங்கிப் பொந்தில் பதுங்கிப்
படுத்து, விடுத்ததன் கெடுமதி யனைத்தும்
அடங்குதல் போன்றே பார்வோன் போர்க்குணம்
முடங்கிடும் செயல்பட முடியா நிலையினால்
எனவுல கறியவே மோசே கைக்கோல்
நீண்டது தீண்டவே எகிப்தின் பசுமையை,
ஆண்டவர் ஏவிடும் வெட்டுக் கிளிகளால்!

காப்பியப் பாடல் 1069

**32 என்றும் உலகமே அறிய ஆண்டவர் அருஞ்செயல் நிகழ்ந்ததே!**

அன்றைய இரவிலும் பகலிலும் தொடர்ந்தே
நின்றிடா வாறே கீழ்த்திசைக் காற்றை
வீசிட ஆண்டவர் ஏவினார் விரும்பியே!
ஆசியின் காற்றோ வெட்டுக் கிளிகளைக்
கொண்டே வந்து குவித்தது நாட்டில்!
மூலை முடுக்கெலாம் வெட்டுக் கிளிகளோ
பாலைப் புழுதியாய்ப் படர்ந்தே பரவின!
பண்டு தொடங்கி எகிப்தின் வாழ்விலே
கண்ட திலையே முன்போ பின்போ;
அஞ்சி யஞ்சி அவலித் தலறி
விஞ்சும் துயரதில் வீழ்ந்ததும் இலையே!

காப்பியப் பாடல் 1070

**33 வெட்டுக்கிளிகள் (விட்டில்கள்) குவிந்து அதம் பண்ணின!**

வெட்டுக் கிளிகள் கட்டுக் கடங்கா
தெட்டுத் திக்கிலும் முட்டி மோதி,
ஒட்டிக் கெட்டியாய் ஒன்றோ டொன்று
பட்டி மந்தைபோல் நெருக்கமாய் நிறைந்ததால்,
நாடே இருண்டது! இருள்சூழ் எகிப்தாய்
ஈடே இல்லா நிகழ்வினால் இழிந்தது!

காப்பியப் பாடல் 1071

**34 கல்மழைக்குத் தப்பிய பயிர் பச்சைகள், மரங்களின் பழங்கள் அனைத்தையும் பருத்த விட்டில்கள் கறித்துப் பறித்துச் சிதைத்தன.**

அந்தோ பாவம்! யாரறி வார்கொல்!
நொந்து நொறுங்கிப் போனது எகிப்தே!
முந்திய கல்மழை யதற்குத் தப்பித்
தொந்தர விலையென் றிருந்த அனைத்துப்
பசிய பயிர்முதல் செடிகொடி யாவையும்
நசிய வெட்டிக் கிளிதின் றொழித்தது;
பழுத்த மரங்களில் தொங்கிய பழங்களை
இழுத்துக் கறித்துக் குதறிக் கெடுத்தது;
நாட்டில் பசுமை காணா வாறவை
போட்டி போட்டுப் பார்த்துப் பார்த்தவை
தின்று தீர்த்தன! நாடழி கோலமாய்
நின்ற தந்தோ வளமெலாம் இழந்தே!

தொடரும்...

# தீயை தீயால் அணைக்க முடியாது

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



ஒரு இளம் தம்பதியினர். திருமணமாகி சில ஆண்டுகள் மட்டும்தான் இருக்கும். குழந்தை பாக்கியம் இல்லை. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்று சொன்னது இவர்களுக்குத் தானா என்று தெரியவில்லை. திடீர் திடீர் என்று சண்டை வரும். ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் பெற்றோரும் நல்ல அறிவுரைகளைக் கூறி இவர்களை வாழ வைக்க முயற்சி செய்ய மாட்டார்கள். குறிப்பாக சொல்லப்போனால் தன் பிள்ளைகளுக்கு பகையைத் தான் மூட்டி விடுவார்களேத் தவிர சமாதான வழிக்கு ஆலோசனைக் கூற மாட்டார்கள். இந்தத் தம்பதியினரின் நண்பர்களும் அதே வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியாக இருவரும் ஒரு முடிவெடுத்து ஒரு முனிவரைச் சந்தித்து கவுன்சிலிங் அதாவது ஆற்றுப்படுத்தல் பெற்றுக் கொள்ளலாமே என்று எண்ணி அவரிடம் சென்றார்கள். இருவரும் மற்றவர் மேல் உள்ள குறைகளை அள்ளி வீசினார்கள்.இதை கவனித்த முனிவர் இவர்களுக்கு ஒன்றும் பெரிய வியாதி இல்லை. சிறு வைத்தியமே போதும் என்று எண்ணி, இவர்கள் இருவரையும் அமர வைத்து, இவர்கள் எதிரில் ஒரு பெரிய தீயை மூட்டச் செய்தார்கள். அது நன்கு பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது, இருவரது கையிலும் ஒரு தீப்பந்தத்தைக் கொடுத்து, அந்த எரியும் தீயை அணைக்கும் படி கூறினார்கள். தம்பதியர் இருவருக்கும் ஒரே சிரிப்பு. தீயை அணைக்க தண்ணீரை ஊற்றலாமே தவிர இன்னொரு தீயால் அதை எப்படி அணைக்க முடியும் என்று அந்த முனிவரையே கேட்டு விட்டார்கள். முனிவர் கூறினார் தீயை தண்ணீரால் மட்டும் அணைக்க முடியும், மற்றொரு தீப்பந்தத்தால் அணைக்க முடியாது. ஆனால் நீங்கள் இருவரும் உங்கள் குடும்பத்தில் இதை தான் பயன்படுத்திக் கொண்டு வருகிறீர்கள். ஒருவர் சண்டை போடும்போது மற்றவர் பொறுமை என்ற தண்ணீரை ஊற்றி அணைக்க வேண்டும். மாறாக இருவரும் சண்டை போட்டால் தீயை தீயால் அணைக்க முயற்சி செய்வது போல் இருக்கும். இது சாத்தியமா என்று முனிவர் தம்பதியினரிடம் கேட்டார். இவர்கள் இருவரும் தங்கள் மனம் தெளிவு பெற்றவர்களாக இனி இவ்விதம் நடக்காது என்றுக் கூறி முனிவரிடமிருந்து விடை பெற்றார்கள். முனிவர் அவர்களுக்கு வாழ்த்துக் கூறி அனுப்பினார்.

குடும்பம் என்றால் சில சமயங்களில் இப்படித்தான் நடக்கும். இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். ஒரே நிலையில் இருந்தால் அதற்கு குடும்பம் என்று பெயர் இல்லை. அதை மியூசியம் என்று கூறலாம். வைக்கப்பட்ட பொருட்கள் மியூசியத்தில் அப்படியே இருக்கும். எந்தவித மாற்றமும் ஏற்படாது. இத்தருணத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரைகளை வழங்க வேண்டும். முதலில் சண்டை வருவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்து அதை தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். சிலருக்கு மற்றவரை வெறியேற்றி விடுவதில் மிகுந்த சந்தோஷம். குடும்பம் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு மகிழ்ச்சி என்று சொல்வார்கள். மூன்றாவது நபரை அனாவசியமாக கலந்து ஆலோசிப்பதை விட்டுவிட வேண்டும். நாமே என்ன வழி என்று கண்டறிய வேண்டும். இதற்கு கடவுளுடைய அருள் நமக்கு மிக முக்கியம். அனைவரும் ஒன்றுகூடி ஜெபிக்கும் போது கடவுள் நம் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார். இவையெல்லாம் ஏற்படவாய்ப்பில்லை. இவ்விதமான குடும்பங்கள் நம்மிடம் வரும்போது சிறந்த ஆலோசனைகளை கொடுப்போம். கடவுள் நம் குடும்பங்களை ஒருபோதும் கைவிட மாட்டார். ●


## மணமகள் தேவை

A. ஜான் ராபர்ட் செல்வம் B.A. (Eng) & B.Sc (Hotel Management) வயது 30, கத்தோலிக்க கிறிஸ்துவர், பணியிடம் சிங்கப்பூர்.

எதிர்பார்ப்பு : மணமகள் 27 வயதிற்குள், பட்டப்படிப்பு முடித்த பணியிலுள்ள (அ) பணியில்லாத நல்ல குணமுற்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்.

தொடர்புக்கு : **91591 47951, 97510 02460**

## 25-ஆம் ஆண்டு நினைவு 10-ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு :13-10-1910
இறப்பு :22-03-1994



பிறப்பு :24-7-1921
இறப்பு :11-5-2009

தெய்வதிரு **ரொலான் பரஞ்ஜோதி** திருமதி. **சகுந்தலா ரொலான்**

Directeur de l'Instruction Publique

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

### செபம்

இரக்கம் நிறைந்த யேசுவே! நாங்கள் நினைக்கும் தோறும் நெஞ்சுருகும் விதமாய் எங்களிடையே என்றும் மறக்க முடியாதபடி வாழ்ந்து, மறைந்து எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்துள்ள திரு. **ரொலான் பரஞ்ஜோதி** திருமதி. **சகுந்தலா ரொலான்** ஆகிய எங்கள் அன்பு பெற்றோரின் ஆன்மா முடிவில்லா பேரின்ப நித்திய இளைப்பாற்றி அடைய வேண்டிக்கொள்ளும்.

பிரிவால் துயருறும்

**மகன்கள்:** Rollin Albert, Rollin Mohan, Rollin Baskar **மகள்கள்:** Arago Santa, Victor Valentrio, Loti Lada

## விண்ணக வாழ்வின் 16-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் :20-10-1938



மறைவு: 06-02-2019

MARIE FRANCOISE DENISE CAMPANA

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-2-2019 புதன் காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
சகோதரி: **குளோதியா ஜோன்**
சகோதர, சகோதரிகளின் பிள்ளைகள்
உடன் வருந்தும் உறவினர்கள்
புதுவை.

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



திரு. R. **பெரியநாயகம்**

பிறப்பு : 24-09-1929
இறப்பு : 27-12-2018

“கடவுளின் செயலுக்காக நான் மௌனமாய் காத்திருக்கிறேன். எனக்கு மீட்பு கிடைப்பதே அவரிடமிருந்தே” -தி.பா.62:1

நிழல்போல் இருந்தவன் நீ
நினைவாய் மாறினாய்!
இதயங்க ளெல்லாம் நொறுங்க
இமைக ளெல்லாம் நனைய!
எங்களை தவிக்கவிட்டு
இறைவனில் ஐக்கியமானாய்!
எங்கும் போகவில்லை நீர்
எங்கள் இதயங்களில் வாழ்கிறாய்!
அன்னாரின் ஆன்மா இறைவனில்
இளைபாறுதல் அடைய ஜெபிக்க
தங்களை அன்புடன்
வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி : P. உத்திரிய மரி
அருட்பணி. P. ஜோசப் டைட்டஸ்,
தலைவர், புனித பேதுரு இறையியல் கல்லூரி, பெங்களூரு.
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
விழுப்புரம்.

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் :16-02-1946



மறைவு: 18-01-2019

திரு.**அகஸ்டின் மரி பெர்னார்டு முருகப்பா**

May all those who sleep in Christ, find light, Happiness and Peace.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-02-2019 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை ஒஸ்பீஸ் மடத்து ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்கள், மமருகள்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும்
உறவினர்கள்.
புதுவை.



**திரு. T.A. லூர்துசாமி**

(Retd. Supt. Survey Officer, Tamilnadu)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08-08-1930 | 05-02-2019 |

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" –யோவான். 11:25

## விண்ணக வாழ்வின்
## 16-ஆம் நாள் நினைவு அஞ்சலி

**ஜெபம்**

இரக்கம் மிகுந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து உம்மிடத்தில் வந்து தஞ்சமடைந்த

## திரு. T.A. லூர்துசாமி

அவர்களின் ஆன்மாவை விண்ணக வாழ்வில் ஏற்று நித்திய அமைதியில் இளைப்பாற தயை செய்தருளும் சுவாமி ஆமென்.

*- கர்.மங்.திரி.*

பிரிவால் துயருறும்

**மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

கோட்டுச்சேரி.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-02-2019 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கோட்டுச்சேரி, புனித சகாய அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

**வங்கதேசம்:** அகதிகள் வருகை அதிகரித்ததால் வங்கதேசம் தனது மியான்மர்-எல்லையை மூடியது. மியான்மரிலிருந்து ஹோஷிங்கியா அகதிகள் வங்கதேசத்திற்குள் வருவது மீண்டும் அதிகரித்துள்ளது. மியான்மரின் ராக்கைண் மாகாணத்தில் சிறுபான்மை ரொஹிங்கியா மக்கள் தாக்கப்பட்டனர். ஆனால், தற்போது பெரும்பன்மை பௌத்த மதத்தினரும், சிறுபான்மை இந்துக்களும்கூட தாக்கப்படுகிறார்கள். மியான்மர் ஆயுதக் குழுவுக்கும், ராக்கைன் ஆயுதக் குழுவுக்கும் இடையிலான மோதலில் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறி வருகிறார்கள் என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. இதனால், வங்கதேசத்திற்குள் நுழைவோரில் பௌத்த மதத்தினர், இந்துக்கள், ரொஹிங்கியாக்கள் என அனைத்து தரப்பினரும் உள்ளனர். தனது சக்திக்கும் அதிகமான அளவுக்கு அகதிகளை ஏற்றுக்கொண்டதாகவும், இனிமேலும் இயலாது என்ற நிலையில் மியான்மர் எல்லைகளை மூடி, அகதிகள் வருவதை தடை செய்வ தாகவும், இனிமேல் மியான்மர்தான் தன் மக்களை திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும் எனவும் வங்கதேச அரசு தரப்பில் கூறப்படுகிறது. - தினமணி.8.2.19

## விண்ணக வாழ்வின் ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி. ஒதேத் (எ) ஜாக்குலின் ரத்தினராஜம்**

| | | |
|---|---|---|
| மண்ணில் மலர்ந்தது | : | 27.11.1944 |
| விண்ணில் மலர்ந்தது | : | 17.02.2010 |

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" –யோவான். 11:25

**அ**ன்புத் திருவுருவே! அழகோவியமே!
**ஆ**ருயிரே! ஆனந்தமே! அம்மா!
**இ**ணையில்லாப் பேரெழிலே!
**ஈ**கையுடன் மிளிர்ந்தவரே!
**உ**த்தமியாய் உற்ற துணையாய்
**ஊ**க்கச் சாரல் ஆனாய் நீ!
**எ**ளிமையை ஏந்திக் கொண்டு
**ஏ**சுபிரான் வழிநடந்தாய் நீ
**ஐ**யமில்லை! வான்வீடு உனக்கே சொந்தம்
**ஒ**ருபோதும் மறப்பதில்லை உனை எங்கள் நெஞ்சம்
**ஓ**ங்கார நாதமாய்
**ஔ**டத அமுதமாய்
உன் ஆசைகளை அகலாக்கி ஆனந்தத்தை திரியாக்கி எம்மை ஒளிர செய்தாயே அம்மா! இனி அந்த ஒளியை எங்கு காண்போம்!

உம் பிரிவால் வாடும்

**அன்புக் கணவர்**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**மற்றும் உறவினர்கள்.**

புதுவை.

**திருப்பலி: 17–02–2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும் அனைவரும் அருள்கூர்ந்து செபிக்க அழைக்கின்றோம்.**

## ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அருட்தந்தை

## R. எலியாஸ்

**மண்ணில்: 24-12-1937**
**குருபட்டம்: 07-04-1966**
**விண்ணில்: 25-02-2014**

மாறிடும் மனம் கொண்ட மனிதரிடையே
மாறாத இறைவனைக் கண்டு கொண்டு
மன உறுதியுடன் வாழ்வில்
சிக்கலான சூழ்நிலைகளில்
இறை விருப்பத்தையே விழைந்து தேடி
தன்னிடம் வந்தவரெல்லாம் இறையாசீர்
பெற்று மகிழ்ந்து வாழ்ந்திட
வழிகாட்டிய அன்பு அருட்தந்தை
**R.*எலியாசின்*** ஆன்மா அமைதிபெற
செபிக்க கேட்டுக் கொள்கிறோம்

இப்படிக்கு
பேரருட்திரு **A. அருளானந்தம்,** V.G.
**மற்றும் தந்தை எலியாசினால்**
**ஈர்க்கப்பெற்றவர்கள்.**

திருப்பலி: 25–02–2019 திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு அருட் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக் காக செபிக்க வேண்டுகிறேன்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :13-07-1974



மறைவு: 24-02-2018

### திரு. மத்தியாஸ் வினோதராஜ்

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 24-02-2019 காலை 11.00 மணிக்கு புதுவை, ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு ஜெபிக்க வேண்டுகிறோம்.**

**பிரிவால் துயருறும்**
Mother: Assumpta Marie
Wife : Madona Patricia
Brothers, Sisters & Family
Relatives & Friends.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திருமதி. சாந்தரசம்மாள் (எ) லீலி கிளமெண்ட் Rtd.H.M.,

பேராலய மரியாயின் சேனை முன்னாள் தலைவி

**தோற்றம் : 08-03-1938**
**மறைவு : 23-02-2018**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான்.11:25

உலக மகளிர் தினத்தன்று பிறந்த
உத்தமத்தாயே
விண்ணிலிருந்து தொடர்ந்து எம்மை
வழிநடத்தும்,

புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 23-02-2019 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறும் திருப்பலியில் பங்குகொண்டு இந்த ஆத்மா இறைவனிடம் இளைப்பாற வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
**கணவர்: கிளமெண்ட் ஈஸ்வர்**

**மகள்கள்:**
**சித்ராவதி செல்வநாதன்**
**ரூபாவதி பெர்நார்ட்**
**வீணாவதி ஸ்டீபன், சரளா விவேக்**
**மற்றும் பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன், கொள்ளுபேத்தி.**

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.**



# திருப்பாபுலியூர் பங்கின் வெள்ளிவிழா ஆண்டு (1993 - 2018)



## அழைப்பிதழ்






அன்புடையீர் ! வணக்கம்,

நிகழும் கிறிஸ்துவ ஆண்டு 2019 பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி (மாசி 05) மாலை 6.00 மணிக்கு, திருப்பாபுலியூர் பங்கு உருவாகி

**25 ஆண்டுகள் நிறைவுறுவதை முன்னிட்டு வெள்ளிவிழா**

கொண்டாட்டம் நடைபெற உள்ளது.. அவ்வமயம், புரனமைக்கப்பட்ட

**புனித சூசையப்பர் ஆலயம்,**

பேராயர் அவர்களால் அர்ச்சித்து திறந்து வைக்கப்படுகிறது. இந்த திருப்பலி கொண்டாட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு, இறையாசீர் பெற்று இப்பெருவிழாவினை சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம்.

❀❀❀

அர்ச்சித்து திறந்து வைப்பவர்

மேதகு பேராயர் **அந்தோணி ஆனந்தராயர்,** D.D.,DCL.,

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்.

❀❀❀

அழைத்து மகிழும் பங்கு பணியாளர்கள்

அருட்பணி V. **ஆக்னல்,** அருட்பணி M. **ஜான் கென்னடி**

அருட்பணி A. **ஜான்**

**அருட்சகோதரிகள், பங்குப் பேரவை, பக்த சபைகள் மற்றும் இறைமக்கள்**

திருப்பாபுலியூர்.

**பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு: பான்சியான் போராட்டம் ஒத்திவைப்பு:** புதுவை முதல்வர் வே. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு ஏற்பட்டதையடுத்து, கத்தோலிக்க கல்வி நிறுவனங்கள் (பான்சியான்) சங்கத்தினர் போராட்டத்தை ஒத்திவைப்பதாக அறிவித்தனர். தொகுப்பூதிய ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். நிரந்தர ஆசிரியர்களுக்கு 7-ஆவது ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, கத்தோலிக்க கல்வி நிறுவனங்கள் (பான்சியான்) சங்கத்தினர் கடந்த டிசம்பர் 20-ஆம் தேதி முதல் பல்வேறு கட்டப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், சனிக் கிழமை (பிப்.9) சட்டப் பேரவையை முற்றுகையிட் டு, போராட்டம் நடத்த முடிவு செய்திருந்தனர். இந்த நிலையில், முதல்வர் வே.நாராயணசாமி பான்சியான் அமைப்பின் செயலர் சாமிநாதன், துணைத் தலைவர் அருளானந்தம், பிரதிநிதிகள் வின்சென்ட்ராஜ் உள்ளிட்டோரை அழைத்து வியாழக்கிழமை இரவு பேச்சுவார்த்தை நடத்தினார். கூட்டத்தில் கல்வி அமைச்சர் ஆர். கமலக்கண்ணன், சு.லட்சுமிநாராயணன் எம்.எல்.ஏ. கல்வித் துறை இயக்குநர், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையின் போது, தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படும். 7-ஆவது ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்தப்படும். நிகழ்மாத இறுதிக்குள் சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படும். அடுத்த கல்வியாண்டில் மாதந்தோறும் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படும். ஏசிபி, எம்ஏசிபி சலுகைகள் அடுத்த கல்வியாண்டில் வழங்கப்படும் என முதல்வர் உறுதியளித்தார். இதையேற்ற பான்சியான் அமைப்பினர், சட்டப்பேரவை முற்றுகை போராட்டத்தை ஒத்திவைப்பதாக அறிவித்தனர், இதேபோல, முதல்வருடன் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டதால், புதுவை அரசு நிதியுதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் கூட்டமையினர் தங்களது போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக அந்தக் கூட்டமைப்பின் கௌரவத் தலைவர் டி.ஆர்.சேஷாசலம் உள்ளிட்ட நிர்வாகிகள் அறிவித்தனர். *- (தினமணி 8-2-2019)*

---

*2-ஆம் பக்கத் தொடர்ச்சி...*

*திருத்தந்தை தம் வாகனத்தை நிறுத்தி அவர்களை ஆசீர்வதித்தது ஊடகங்களில் விரைவாகப் பரவியது. திருத்தந்தை தமது மறையுரையில், புனித மத்தேயு நற்செய்தியில் ஐந்தாம் அதிகாரத்தில் உள்ள பேறு பெற்றோர் பகுதியை (மத்.5:1-11) மையமாக வைத்து, நாம் ஒவ்வொருவரும் பேறு பெற்றோர்; கிறிஸ்தவ வாழ்வு இதனை மையமாகக் கொண்டது, அது நமது மகிழ்வுக்கு காரணமாகிறது என்றுரைத்த திருத்தந்தை, தனிப்பட்ட பேறுபெற்றோர் என்று பார்க்கும்போது - (பணக்காரர்கள் அல்ல) ஏழைகள் பேறு பெற்றோர் எளியவர் பேறு பெற்றோர்; எனவே ஏழையரை மதிக்கவும் அவர்களுக்கு உதவவும் நமக்கு கடமையுண்டு; நாம் ஏழையரையும் எளியவரையும் எவரும் நம்மை அணுகக்கூடியவராகவும் இருக்க வேண்டும் என்றும் உரைத்தார். மேலும் சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் என்பதைக் குறிப்பிட்டு, போர் களைத் தவிர்க்கவும் சமாதானத்தைத் தேடவும் அழைப்பு கொடுத்தார். மேலும் சாந்தம் உள்ளோராக வாழும்போது இறைவனின் பிரசன்னம் நம்மைத் தொடுகிறது என்றுரைத்த திருத்தந்தை ஒவ்வொருவரும் மற்றவருக்கு அன்பை கொண்டு செல்ல வேண்டும் என்று கூறி தம் மறைஉரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.*

*உணர்வுப்பூர்வமாக, எளிமையும் தாழ்ச்சியும் நிறை சூழலை தமது பிரசன்னத்தால் அறிக்கையிடும் திருத்தந்தை, ஐக்கிய அமீரக திருப்பயணத்தை மேற்கொண்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.* ●

***Printed and Published*** **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. **C.ANTONI ROCHE**, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.